பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
# THE EELANAADU

மலர் 20 வைகாசி 4 ஞா ஆண்டு 10 இதழ் 96
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18-5 78

## டொமினிக்கன் குடியரசில்
### பொலிஸ் அதிபர் ஆட்சியை கைப்பற்றினர்

லண்டன், மே 17

டொமினிக்கன் குடியரசின் பொலிஸ் மா அதிபர் இன்று அரசைக்கைப் பற்றி பதவியில் அமர்ந்து விட்டதாக இங்கு செய்தி கிடைத்துள்ளது.

டொமினிக்கன் குடியரசில் இன்று ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சி வேட்பாளர் பெரும்பான்மை வாக்குகளைப்பெற்று வெற்றி பெறும் வாய்ப்பைப் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதேசமயம் ஆயுதப்படைகள் புரட்சிசெய்தபோதிலும் அந்நாட்டின் போலிஸ்மா அதிபர் பதவியில் அமர்த்தப்பட்டுவிட்டதாகவும் பதவியிலிருந்த ஜனாதிபதியும் பதவி ஏற்கவிரு

[6-ம் பக்கம் பார்க்க]

### திறப்புவிழா

(கொழும்பு)

சீன உதவியுடன் மின்னேரியாவில் அமைக்கப்பட்டுள்ள புடவைத் தொழிற்சாலையை இன்று தேசிய அரசுப் பேரவை சபாநாயகர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ், புடவைக்கைத்தொழில் அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸும் திறந்துவைப்பார்கள் 6 கோடி 97 லட்சம் ரூபா செலவில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. (ம)

# அட்டனில் கைதானவருக்கு
# 26-ம் திகதிவரை ரிமாண்ட்

## தோட்ட குமாஸ்தா தம்பதிக்கு 30ம் திகதிவரை மறியல்

### புலிகள் தடை சட்டம் மீது இன்று விவாதம்

(கொழும்பு)

**அட்டனில் கைதுசெய்யப்பட்ட வாமதேவன் என்ற தனபாலசிங்கம் இம் மாதம் 26ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். 26ம் திகதி அவர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவார். அன்று அங்கு அடையாள அணிவகுப்பு நடைபெறும்.**

**இவருக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் என்று கூறப்படும் மரே தோட்ட உதவி குமாஸ்தாவும் அவரது மனைவியும் 30ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அன்று அவர்கள் அட்டன்நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவார்கள்.**

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் சட்ட மூலம் இன்று தேசிய அரசுப் பேரவையில் மூலு அளவில் விவாதிக்கப்படவிருக்கின்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொள்ள அரசாங்க எம் பிக்கள் அனைவரும் சபைக்கு வந்திருக்கவேண்டும் என்று அரசாங்கக்கட்சிக் கொறடா அறிவித்திருக்கிறார்.

அட்டனில் வைத்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட வாமதேவன் என்ற தனபாலசிங்கம் கடந்த செவ்வாயன்று இரவு கொழும்பு பிரதம நீதவான் திரு ரணராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

வாமதேவனுக்கு அட்டனில் அடைக்கலம் கொடுத்தவர்கள் என்று கருதப்படும் மஸ்கேலியா மரேகுரூப் உதவிக் குமாஸ்தா இராமலிங்கமும் அவரது மனைவி புஸ்பகாந்தாவும் பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

வாமதேவனை இம்மாதம் 26ம் திகதி மன்னார் மஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யுமாறும் அதுவரை விளக்கமறியலில் வைக்குமாறும் பிரதம நீதவான் உத்தரவிட்டார். 26ம் திகதி மன்னார் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவிருக்கின்றது.

முருங்கனில் கொலையுண்ட இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் கொலைதொடர்பாகவே வாமதேவன் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

இதேசமயம் மரேகுரூப் உதவிக்குமாஸ்தாவும் அவரது மனைவியும் 30ம் திகதி அட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவேண்டும் என்று நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வாமதேவனுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் என்று கூறப்படும் இத்தம்பதிகள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

**விடுதலைப்புலி இயக்க தடைச்சட்டம்**

தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் இயக்கம்போன்ற இயக்கங்களைத் தடைசெய்வதற்கான சட்டமூலம் இன்று தேசிய அரசுப்பேரவையில் நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்தினால் தாக்கல்செய்யப்படவிருக்கிறது. இச்சட்டத்தினால் அவசரத் தேவையை உத்தேசித்து சபையின் நிகழ்ச்சிகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டு இது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். சட்டமூலத்தின் மீதான முதலாம் இரண்டாம் வாசிப்புக்கள் இன்றே நடைபெறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

விவாதம் மிகப் பரபரப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**கூட்டணி குழு கூடுகிறது**

இச்சட்ட மூலத்தின்மீது தமிழர் விடுதலைக்கூட்டணி நிலைப்பாடு என்னவாக இருக்கவேண்டும் என்பது குறித்து இன்று கூட்டணி

[6-ம் பக்கம் பார்க்க]

## வாமதேவனுக்கு எதிரான பொலிஸ் குற்றச்சாட்டுகள்

(கொழும்பு)

அட்டனில் வைத்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட திரு வாமதேவனுக்கு எதிரான பல குற்றச்சாட்டுகள் அடங்கிய அறிக்கையொன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்திரானவால் கொழும்பு பிரதம நீதவான் திரு. ரணராஜாவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சந்தேகநபர் வாமதேவன், பொத்துவில் இரண்டாவது எம் பி திரு. எஸ். கனகரத்தினத்தை கொலைசெய்ய முயன்றாரெனவும், முருங்கன் சி. ஐ. டி பொலிசார் கொலையில் சம்பந்தப்பட்டாரெனவும், ஏருவூர் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டாரெனவும், தமிழ் ஈழ விடுதலைப் புலிப்படையில் ஓர் உறுப்பினராக இருக்கிறார் எனவும், இலங்கை அரசுக்கு எதிராக போர்தொடுக்க சதிமுயற்சிகளை மேற்கொண்டாரெனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று வாமதேவனுக்கு புகலிடம் அளித்த தோட்டத்து குமாஸ்தாவுக்கும் அவரது மனைவிக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (ம)

## இன்று விவாதிக்கப்படும் சட்டமூலங்கள்

(கொழும்பு)

தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதற்கும் குறிப்பிட்ட சில குற்றங்களுக்காக நீதிமன்றம் முன் ஆஜர் செய்யப்படும் நபர்களுக்குப் பிணை அனுமதித்தல், ஒத்திவைத்த சிறைத் தண்டனை விதித்தல்போன்ற நீதிமன்ற உத்தரவுகளைத் தடைசெய்து தண்டனை விதிக்க வழிசெய்வதற்குமான இரண்டு சட்டமூலங்கள் இன்று தேசிய அரசுப்பேரவையில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படவிருக்கின்றன.

அவைகளில் ஒன்று குற்றவியல் நடவடிக்கை முறை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலமாகும்.

தேசிய அரசுப்பேரவை நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் அதன் வாசகம் பின்வருமாறு உள்ளது.

குற்றவியல் நடவடிக்கை முறை (சிறப்பேற்பாடுகள்):- குறித்த சில தவறுகள் புரியப்படுகின்றமை தொடர்பில் சரணடையும் அல்லது நீதிமன்றத்தின் முன்னர் கொணர்ந்து நிறுத்தப்படும் ஆட்கள் குறித்த சில நீதிமன்றங்களினால் பிணையின் மீது விடுவிக்கப்படுவதைத் தடைசெய்வதற்கும் அல்லது மட்டுப்படுத்துவதற்கும், அத்தகைய தவறுகளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் அல்லது குற்றவாளிகளாகக் காணப்படும் ஆட்கள்மீது நிறுத்திவைக்கப்படும் மறியற்றண்டனைத் தீர்ப்புக்கள் விதிக்கப்படுவதனை தடைசெய்வதற்கும் அவ்வாட்கள் நிபந்தனையுடன் விடுவிக்கப்படுவதனைத் தடைசெய்வதற்கும், அத்தகைய தவறுகளுக்கு ஆகக்குறைந்த தண்டனையை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்குமான தோரு சட்டமூலம்.]

இரண்டாவது சட்டமூலம் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளும் இதையொத்த வேறு அமைப்புகளுக்கும் தடைவிதிக்கும் சட்டமூலமாகும். அதன் விபரம் வருமாறு:

தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கும் இதையொத்த வேறு அமைப்புகளுக்கும் தடைவிதித்தல்- தமிழ் ஈழ விடுதலைப்புலிகளைத் தடை விதிப்பதற்கும், அதன் குறிக்கோளை எய்துவதற்கு வன்முறையைப் பயன்படுத்துமாறு பரிந்துரைக்கின்றதும் அரசின் பாதுகாப்புக்கு பங்கமானதாக இருந்து வருகின்றதுமான வேறேதேனும் அமைப்புக்குத் தடைவிதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய ஏதேனும்

[6-ம் பக்கம் பார்க்க]

## சட்டங்களை ஆராய அவகாசம் தேவை

(கொழும்பு)

இன்று பேரவையில் விவாதிக்கப்படவிருக்கும் மசோதாக்கள் இரண்டையும் சபையில் தாக்கல் செய்வதை பின்போடுமாறு சுதந்திரக்கட்சி தொழிற்சங்க சம்மேளனமும், அரசாங்கசேவைத் தொழிற்சங்க சம்மேளனமும் தனித் தனியாக ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு தந்தி மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சட்டமூலங்கள் சிவில் உரிமைகளைப் பாதிக்கக்கூடியவையாக இருக்கலாம் என்றும்; அரசியல் தொழிற்சங்க உரிமைகளைப் பறித்து, பத்திரிகை சுதந்திரத்தை நசுக்குபவையாகவும் இருப்பதால், இச் சட்ட மூலத்தை நன்கு படித்து அறிவதற்கு அவகாசம் தேவை என இச்சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன. [ம]

PERIODICALS DIVISION LIBRARY

# வரி விளம்பரம்

## தேவை

கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்கு உள்ளவர்கள் மேற்கூறிய விலாசத்தாருடன் தொடர்பு கொள்ளவும். சு. சிவபாலன் பிறதர்ஸ், உரும்பிராய். 9314

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும் வேலை பழகுபவர்களும் தேவை சம்பளம் ரூபா ஆறு கொடுக்கப்படும். நேரில் வரவும். செல்லர்கள் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி. 9224

யாழ். பஸ் நிலையத்திற்கு அண்மையில் வீடு. அல்லது வீட்டின் ஒரு பகுதி (Annex) வாடகைக்கு இருப்பின் தொடர்பு கொள்ளவும். கி. என். ஜீவரட்ணம், ராணி சினிமா, யாழ்ப்பாணம். 9320

## விற்பனைக்கு

சவலட்வான் (Chevrolet Van) டீஸல் எஞ்சின் இணைக்கப் பெற்றது. ஈ. வை. ஒஸ்ரின் A. 40 கார். விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். கு. இராசரத்தினம், மன்னன் தோட்டம், மூளாய், சுழிபுரம். 9307

19-5-78 வண்ணிவிழாங்குளம் அம்மன் கோவில் பொங்கல் விழாவில் எமது விளம்பர விற்பனை வாகனத்தில் மில்க்வைற் தயாரிப்புப் பொருட்கள் யாவும் சலுகை விற்பனை நடைபெறும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் விளம்பர வாகனத்தில் கொடுத்து சிறந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் மில்க்வைற், யாழ்ப்பாணம். 9304

கறுத்தக்கொழும்பான், வெள்ளைக்கொழும்பான், அம்பலவி, செம்பாட்டான், மல்கோவா மாம்பழங்கள் 10,000 வரையில் 9 மரங்களில் விற்பனைக்கு இருக்கின்றன. 1500 தென்னைமரங்களின் ஓலைகளும் விற்பனைக்கு இருக்கின்றன. இவை பற்றிய விபரங்களுக்கு தேவதாசன், மே/பா திருமதி பா. ஏபிரகாம், தபாற்கந்தோர் முன்பாக, சாவகச்சேரி விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 9322

றேடியோ கடையின் அதி முக்கியமான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் றேடியோ உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9324 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9324

## தவறிவிட்டது

இரும்புப் பெட்டி திறப்புக் கோர்வையும் இரு திறப்புக் கோர்வையும் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, செல்லையா அன் சன்ஸ் நகை மாளிகையில் கொடுத்து சன்மானம் பெறவும். 9319

## நெல்லியடி உற்சவம்

[உடுப்பிட்டி]

நெல்லியடி தடங்கன் முருகமூர்த்தி ஆலய வருடாந்த 10 நாள் உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. எதிர்வரும் திங்கட்கிழமை தேர்த்தீர்த்தத்துடன் இவ்வுற்சவம் நிறைவுபெறும். [உ]

'விடுதலைப் புலி இயக்க'த்தினரைத் தேடி

# தென்மராட்சி கிழக்கில் வீடு வீடாகச்சோதனை

## தெல்லிப்பளையிலும் தீவிர 'வேட்டை'

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நேற்றும் தொடர்ச்சியாகப் பல இடங்கள் பொலிசாரின் பலத்த சோதனைக்குள்ளாகின.

நேற்று முன்தினமிரவு தெல்லிப்பழை, வறுத்தலைவிளான் ஆகிய இடங்கள் பொலிஸ்—இராணுவத்தினரின் கடுமையான 'வேட்டை'க்குள்ளாகின.

பொலிசார் தேடும் நால்வரின் உறவினர்கள் வீடுகள் 'சல்லடை'க்குள்ளாகின என்றும் நெருங்கிய உறவினர்கள் பொலிசாரின் விசாரணைக்குள்ளாகினர் என்றும் தெரிய வருகிறது.

தென்மராட்சிகிழக்குப்பகுதியில் கடந்த இரண்டுதினங்களாக முருங்கன் கொலை தொடர்பான சந்தேக நபர்களை பொலிசாரும் இராணுவத்தினரும் வீடு வீடாக தேடுதல் நடத்திவருகின்றனர்.

பொலிசாரும் இராணுவத்தினரும் தேடுதல் நடத்தும் சமயம் மேலே ஹெலிகொப்டர்கள் வட்டமிட்டு அப்பகுதியை கண்காணித்துவருகின்றன.

எழுதுமட்டுவாள், கொடிகாமம், மிருசுவில் வடக்கு பகுதிகளில் தேடுதல் வேட்டை தீவிரமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் டிரக் வண்டிகளிலும் ஜீப்வண்டிகளிலும் வந்த பொலிஸ் இராணுவத்தினர், அதிகாலை 5 மணிக்கு தேடுதலை ஆரம்பித்தனர்.

ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று சோதனையிட்டு வருகின்றனர், சிலரை விசாரணை செய்து வருகின்றனர்.

நேற்றுக்காலை கொடிகாமத்திலும் ஹெலிகொப்டர் விமானம் வட்டமிட்டு கண்காணிப்புச் செய்தது. கொடிகாமம் சந்தியில் ஆயுதம் தரித்த பொலிசார் காவல்புரிந்து வருகின்றனர்.

காங்கேசனில்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப் பகுதியிலுள்ள கிராமங்கள் தோறும் வீடுவீடாக பொலிசாரது சோதனை இடம்பெற்று வருகிறது.

காங்கேசன்துறை பொலிசாரும், மேலதிகமாக வந்துள்ள பொலிசாருமாகச் சேர்ந்து குற்றச் செயல்கள் தொடர்பான தஸ்தாவேஜுகளைக் கண்டு பிடிப்பதற்காக வீடுவீடாக சோதனை போட்டுவருகிறார்கள்.

அத்துடன் வீதிகளில் செல்லும் சந்தேகத்திற்கிடமான வாகனங்களும் பலத்த சோதனைக்குள்ளாகின்றன.

## யாழ்ப்பாண மாநகரசபை மராமத்துப் பகுதிக்கான பொருட்கள் விநியோகிப்பதற்குரிய கூறுவிலைகள்

இறசர் சல்லி, கருங்கல், மணல், கிறசர்தூள், தேங்காய் மட்டை, சுண்ணாம்பு, இரும்பு முதலிய பொருட்களை மாநகரசபை எல்லைக்குள் குறிப்பிடப்படும் இடங்களில் விநியோகிப்பதற்கான கூறுவிலை விபரத்தை இருபிரதிகளில் 24-5-78ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அரக்கு முத்திரையிடப்பட்ட தபால் உறையில் சமர்ப்பிக்கவும், தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் "மராமத்துப் பகுதி பொருட்களின் கூறுவிலை" எனக் குறிப்பிடப்படல்வேண்டும். திருத்தங்கள் சுருக்குக் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மேலதிக விபரங்கள் மராமத்துப் பகுதிப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

க. சிவஞானம்
ஆணையாளர்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
17-5-78. 9323

## வல்வையில் அறுவர் கைது; விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்

(பருத்தித்துறை)

முருங்கன் பொலிஸ் கொலை தொடர்பான சந்தேக நபர்களைத்தேடி பொலிசாரும் இராணுவத்தினரும் வல்வெட்டித்துறையில் தேடுதல் வேட்டை நடத்திய போது ஆறுபேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இத்தேடுதல் வேட்டையில் சுமார் 500 பொலிசாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டனர்.

இத் தேடுதல் வேட்டையினால் வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள கடைகள் திறக்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. வல்வெட்டித்துறைச் சந்தையிலும் வியாபாரம் நடைபெறவில்லை.

இத்தேடுதல் வேட்டையின் போது இப்பகுதியில் உள்ள வீடொன்றில் கிடந்த வானொலிப்பெட்டி ஒன்று பொலிசாரால் கைப்பற்றப்பட்டு சுங்கப் பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச் செய்தி எழுதப்படும் வரை விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்ட சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

# "கடல்வள ஆய்வுப்பிரிவுக்கு தொண்டமானாறு கேந்திரமாகலாம்"

— கே. துரைரத்தினம் எம். பி.

[யாழ்ப்பாணம்]

"இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கடல்வள ஆய்வுப் பிரிவு ஒன்று நிறுவப்படவுள்ளது. அதற்கான ஆய்வுகளுக்கு தொண்டமானாறு முக்கிய கேந்திரமாக அமையும் தன்மையைக் கொண்டுள்ளது"

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தில் மீனவர்கள், மீனியல் நிபுணர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நடத்திய கருத்தரங்கு ஒன்றுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "தொண்டமானாற்று ஏரியில் மீன்பிடித்து வாழ்க்கை நடாத்திய மக்கள் கடந்த சில ஆண்டுகளாக வருமானமின்றி வாடுகிறார்கள். அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்குமுகமாக ஏரியின் மீன்வளத்தைப் பெருக்க நிலையம் எடுத்துவரும் முயற்சி பாராட்டத்தக்கது.

பாலைமீன் குஞ்சுகளை வளர்த்து அவற்றை ஏரியில் விடுவது மீனவர்களுக்குப் பெரிதும் பயன்படும். மீனவர்கள் இங்கு ஆராய்ச்சி செய்பவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கினால் அவர்கள் ஏரியை மீன்வளம் நிறையச் செய்வார்கள் பேராசிரியர் திரு. கி. கே. கணேசலிங்கம் சிநேகர் நிறுவன அறிஞர்கள் இங்கு ஆராய்ச்சிசெய்ய முன்வந்துள்ளனர்.

வெளிக்கள நிலையம் பரீட்சார்த்தமாக நிறுவவிருக்கும் மீன்வளர்ப்புக்குளம் வெற்றியான முடிவுகளைத்தரும். அம்முயற்சி மேலும் தொடரும். அதனைச்சிறப்பாகநிறைவேற்ற அரசின் ஆதரவு கிடைக்கும்" என்றார். [உ]

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற போது கல்லூரியின் சீர்கேடுகள், உற்சாகமின்மை, சங்கத்தின் நடவடிக்கையில் பலவீனம் என்பதுபற்றி பலரும் தமது கண்டனங்களைக் கூறினர். பாடசாலையை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்ல அனைவரும் ஒத்துழைப்பை நல்குவதாக வாக்குக்கொடுத்ததோடு புதிய நிர்வாகமும் தெரியப்பட்டது.

பழைய அதிபர் திரு. செல்வத்துரை தலைவராகவும், திரு. இதம்பரப்பிள்ளை காரியதரிசியாகவும், திரு ஜெயசீலன் தனாதிகாரியாகவும் கொண்ட 13 பேர்கள் அடங்கிய சமிட்டி தெரியப்பட்டது (இ)

## பிரிவுபசாரம்

(உடுப்பிட்டி)

காரைநகர் சிநோர் நிறுவனத்தின் மீன்பிடிப் பகுதியில் மீன்பிடிப்பயிற்சி அதிகாரியாகப் பணியாற்றி தாயகம் திரும்பும் திரு. சன்னிக்கு பிரன்தாப நிறுவன அதிகாரிகளாலும் ஊழியர்களாலும் விருந்துபசாரமொன்று கஸ்ரைநகர் கஜீனு பீச்சில் அளிக்கப்பட்டது.

மீன்பிடிப் பயிற்சித்துறை ஆசிரியர் திரு. தர்மசீலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபத்தில் பொறுப்பாளர் திரு. ரட்ணராஜா, திரு. டீ. ரீ. ரஞ்சன் அலோசியஸ் ஆகியோரும் உரையாற்றினார்கள். [உ]

## கி. மு. சங்கங்கள் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

வலி. தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களை அரசாங்கத்தின் புதிய திட்டப் பிரகாரம் புனரமைப்புச் செய்வதற்கு சண்டிலிப்பாய் வலிதென் மேற்கு பிரிவுக்கான கிராம அபிவிருத்தி அதிகாரி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். இதன் பிரகாரம் விரைவில் பண்டத்தரிப்பு, சில்லாலை, பெரியவிழான் ஆகிய இடங்களிலுள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. [இ]

## வாகனங்கள் சோதனை

ஆயுதந் தரித்த பொலிசார் பலசந்திகளில் நின்று சகல வாகனங்களையும் சோதனை செய்து வருகின்றார்கள் வல்லைச்சந்தி நெல்லியடிச்சந்தி கலிகை ஆகிய சந்திகளில் பொலிசார் காவல் புரிந்தனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து முருங்கன் கொலைகள் தொடர்பாக ஐந்துபேர் விசாரணைக்காக பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது. (உ)

## பங்குக்குரவர் இடமாற்றம்

(உடுப்பிட்டி)

கரவெட்டிப் பகுதிப் பங்குக் குரவராகப் பணிபுரிந்து நெடுந்தீவுப்பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் அருட். திரு. பீட்டர் துரைரத்தினம் அடிகளாரின் சேவையைப்பாராட்டி தேநீர் விருந்துபசார வைபவமொன்றை நடாத்த இப்பகுதி கத்தோலிக்க இளைஞர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

## நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

சுதுமலை நாவலர் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலையத்தலைவர் திரு. க. பாலசுப்பிரமணியம், உபதலைவர் இ. திருஞானசம்பந்தர் காரியதரிசி க. மோகன் உபகாரியதரிசி அ. சிவராசா தனாதிகாரி அ. சிவதாசன் நூலகப்பொறுப்பாளர் செ. மகேந்திரன்

5 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. [உ]

## பரீட்சை

[உடுப்பிட்டி]

மட்டக்குளி இலங்கை கடற்றொழில் நிறுவனத்தில் பயிற்சியாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான எழுத்து மூலப்பரீட்சை மேற்படி நிறுவனத்தில் நடைபெற்றது.

இப் பரீட்சைக்கு 44 பரீட்சார்த்திகள் சமுகமளித்திருந்தனர். இவர்களுக்கு கணிதம் பௌதிகம், பொதுவிவேகம் ஆகிய பாடங்களில் எழுத்து மூலப் பரீட்சை நடைபெற்றது.

ஜப்பானிய அரசாங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் இப்பயிற்சித் திட்டத்தில் இத் தடவை 30 பயிற்சியாளர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## கொலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு செங்கலடிச் சோலையில் நடைபெற்ற கொலைச்சம்பவம் ஒன்று தொடர்பாக மூவர் தேடப்படுகின்றனர். [உ]

ஈழநாடு
The Eelanaadu

## அரிசி உணவு

இவ்வருடம் நெல்விளைச்சல் அமோகம். இதனால் சிறுவிலிருந்துவரும் அரிசியை வேறுநாடுகளுக்கு விற்பது பற்றி ஆலோசிப்பதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்திருக்கிறார்

நெல்விளைச்சல் அதிகரித்துள்ளது குறித்து மகிழ்ச்சியடையாதவர் எவரும் இருக்கமுடியாது,

ஆனால் நெல்குற்றும் அரிசி ஆலைகள் குறைவாக இருப்பதும் நெல்லைச் சேமித்துவைப்பதற்கு வசதி குறைவாக இருப்பதும் தான் இன்றுள்ள பெரும்பிரச்னை

அரிசி ஆலைகள் பல கடந்த சில ஆண்டுகளில் முடப்பட வேண்டியேற்பட்டது. இந் நிலையில் அரசாங்கமே அரிசி ஆலைகளை நிறுவினால் பயனுள்ளதாக அமையும்.

நெல்விளைச்சல் அதிகமாக இருந்தாலும்கூட சீனவுடன் செய்துள்ள அரிசி - ரப்பர் ஒப்பந்தப்படி அரிசியை வாங்கத்தான் வேண்டும் சீனவிடமிருந்து வாங்கும் அரிசியை வேறு நாடுகளுக்கு விற்பதன்மூலம் கணிசமான தொகை இலாபமும்கிடைக்கும்

இதேசமயம் வர்த்தக அமைச்சர் மற்றொரு யோசனையையும் தெரிவித்திருக்கிறார்.

கோதுமைமாவை உபயோகிப்பதை வெகுவாகக் குறைத்து அரிசியையும் அரிசிமாவையும் அதிகமாக உபயோகிக்க வேண்டுமென்பதுதான் அவரது யோசனை.

கோதுமை மாவையும் பாணையும் உபயோகித்துப் பழக்கப்பட்டு விட்டவர்களுக்கு அரிசிமாவில் உணவு தயாரிப்பது சிறிது கஷ்டம் தான்.

ஆனாலும் கோதுமை மாவைவிட அரிசிமாவில் தயாரிக்கும் பண்டங்களில் போஷாக்கு அதிகமிருக்கிற தென்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டியது அவசியம்.

வடபகுதியில் இன்னமும் கோதுமை மாவையோ, பாணையோ உபயோகிக்காத சில குடும்பங்களிருக்கின்றன. வயது முதிர்ந்தாலும் அரிசி, குரக்கன் ஆகியவற்றையே உபயோகித்து இன்னமும் திடகாத்திரமாக இருப்பவர்களும் உளர்.

நெல்விளைச்சல் அமோகமாக இருந்தாலும் அரிசியை எல்லோரும்வாங்கி மூன்று வேளையும் உண்ணக்கூடிய அளவுக்கு அரிசியின் விலை இறங்கவில்லை.

சிலகுடும்பங்களுக்கு முன்னிருந்ததைவிட அரிசியின் விலை இப்போது குறைந்துள்ளபோதிலும் கோதுமை மாவுக்கும் பாணுக்கும் பதிலாக அரிசியை உபயோகிக்கக்கூடிய அளவுக்கு அரிசியின் விலை குறையவில்லை.

அரிசியின் விலை குறைந்தால் கோதுமை மாவுக்குப் பதில் அரிசிப்பதார்த்தங்களையே உபயோகிப்பதற்கு மக்கள் முன்வருவர்.

அரிசிப்பதார்த்தங்களில் சத்து அதிகம். அதேசமயம் கோதுமைமாவைக் குறைவாகப்பாவிப்பதனால் வெளிநாடுகளுக்குச் செல்லும் எமதுபணமும் மீதமாகும்.

சன்சோனி விசாரணைக்கமிஷன்:

# ''என்வீடு முற்றாகத் தீக்கிரையானது; அப்பா நமக்கு இந்தநிலைவந்ததே என அழுதான் மகன்''

## கண்டி வர்த்தகர் சாட்சியம்

[கண்டி]

''பொலிசாரின் உதவியுடன் காட்டிற்குள் சென்று அங்கு ஒளிந்திருந்த என் குடும்பத்தினரைக் கண்டுபிடித்தேன். அப்போது என் மகன் என் கால்களைப்பிடித்துக்கொண்டு 'அப்பா நமக்கு இப்படி நடந்துவிட்டதே' என்று அழுதான்.''

இவ்வாறு கண்டியில் சன்சோனிக் கமிஷன் முன் தோட்ட உரிமையாளரும், கண்டி வர்த்தக நிறுவனம் ஒன்றின் பங்காளியுமான குசைராஜ் ரெட்டி [62 வயது] சாட்சியமளிக்கையில் கூறினார்.

சாட்சியமிகளை சட்டத்தரணி திரு. கே. என். சொக்ஸி நெறிப்படுத்தினார்.

குசைராஜ் தமது சாட்சியத்தில் மேலும் சொன்னதாவது: ''கண்டிப்பகுதியில் சென்ற 20 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறேன் யாழ்ப்பாணத்துக்கும் எனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.

சென்ற ஆகஸ்ட் 19ம் திகதி காலை வழக்கம்போல் நான் கண்டிக்குக் காரில் புறப்பட்டு வந்தேன். கண்டியில் இருந்து என்வீடு 6 மைல் தூரத்தில் உள்ளது.

வழியில் எனது காரை மறித்து நால்வர், ''பறைத்தமிழா கொல்ல வேண்டும்'' என்று சத்தமிட்டவாறு ஓடிவந்தனர். ஒருவாறு சமாளித்துக்கொண்டு நான் கட்டுகஸ்தோட்டைக்கு வந்தபோது அங்கும் பத்துப்பேர் வழிமறித்து அவ்வாறே சத்தமிட்டனர்.

அங்கிருந்தும் தப்பி பேராதனை பாலத்துக்கு வந்த நான் அங்கிருந்த 4 பொலிசாரிடம் நடந்ததைக்கூறி என்னைக் கண்டியிலோ அல்லது பழையபடி வீட்டிலோ கொண்டுபோய் விடுமாறு கேட்டேன். அவர்கள் மறுத்து விட்டனர்.

வழியில் எனது காரைக் கண்ட சிலர் "தமிழனாக இருந்தால்அடி, கொல், என பலமாகச் சத்தமிட்டனர் இவர்கள் திருகோணமலை வீதியில் சில கடைகளை உடைத்து கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர்.

அன்று மாலை 3 மணியளவில் கண்டி பொலிஸ் அதிபர் எம். சண்முகத்திடம் சென்று கண்டிக்குப்போக உதவுமாறு கேட்டேன். அப்போது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. நான் பொலிஸ் துணையுடன் வீட்டுக்குச் சென்றேன் எனது வீடுமுற்றாக உடைத்துத் அதற்குத் தீயிடப்பட்டிருந்தது.

ஒரு தொழிலாளியைச் சந்தித்து எனது குடும்பத்தினர் எங்கே? என்று கேட்டேன். அவர்கள் காட்டில் ஒளிந்திருப்பதாக அவர் சொன்னதும் பொலிஸ் துணையுடன் காட்டிற்குச் சென்று அவர்களைக் கண்டுபிடித்தேன். அப்போது என் மகன் "அப்பா நமக்குப் இப்படி நடந்து விட்டதே" என்று கால்களைப்பிடித்து அழுதான் எதற்கும் கவலைப்பட வேண்டாம் என நான் அவர்களைத் தேற்றினேன். அதற்குள் பொலிசார் துரிதப்படுத்தினார்.

நாம் அங்கிருந்து புறப்பட்டு வரும் வழியில் ஜெயவிக்கிரம என்பவரது வீட்டிற்கு அருகில் சுமார் 500 பேர்வரை மண்வெட்டிகள் கத்திகள் அலவாங்குகள் கோடரிகள் சகிதம் திரண்டு நின்று கோஷமிட்டவாறே சென்றனர்.

நான் கண்டி திரும்பியதும் எனது தேயிலைத் தொழிற்சாலையும் தீக்கிரையாக்கப்பட்டதாக அறிந்தேன்.

இத்தீயின் தொடர்பாக 20—25 பேர்மீது வழக்கு இருப்பதாக அறிகிறேன்.

எனக்கு 7 லட்சத்து 53,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது என்றார். [உ]

# ''பிக்குவின்தலை மீன்பெட்டியில் வந்துள்ளது என்றனர் குண்டர்கள்''

[கண்டி]

''பௌத்த மதகுரு ஒருவரின் தலையை வெட்டித் தலையையும் சிங்களம் பெண்களின் மார்புகளையும் மீன்பெட்டிகளுக்குள் வைத்து யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டிக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆகையால் இங்குள்ள தமிழர்களைக் கொல்லப்போகிறோம் என்று சத்தமிட்டவாறு 10 பேர் வீட்டை நோக்கி வந்தனர்''

இவ்வாறு சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த பிடவைக் கடை உரிமையாளரான பெரியண்ணபிள்ளை சோமசுந்தரம் (வயது 36) சொன்னார்.

அவர் தொடர்ந்து சொன்னதாவது:

''இக்கோஷ்டியினர் 20க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதினர். அவர்களைக் கண்டு நாம் புதருக்குள் ஒடிமறையச் சென்றோம். அப்போது மனைவி தாலிக்கொடியை கழற்றி இடுப்பில் வைத்துக்கொண்டார். அவர்கள் முதலில் தாலியையும், பின்னர் பணத்தையும் கேட்டார்கள். அவை எல்லாம் வங்கியில் என்றதும் போய்விட்டனர். நாம் திரும்பி வீட்டிற்கு வந்தபோது வீடு உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன'' என்றார் (உ)

# துவக்குச்சூட்டால் விழியிழந்தார் என்மனைவி'

## பால்பண்ணை உரிமையாளர் சாட்சியம்

(கண்டி)

''ஆகஸ்ட் 18-ந் திகதி இரவு 12 மணியளவில் நாம் வீட்டில் படுத்திருந்தோம். கதவை நோக்கிக் குண்டர்கள் சுட்டனர். ரவைகள் என் இடது கை விரலிலும், வலது கையிலும் பட்டன. மனைவி மயங்கி விழுந்துவிட்டார். இச்சம்பவத்தின் பின் மனைவியின் கண்கள் பார்வையை இழந்தன'.

இவ்வாறு சன்சோனிக்கமிஷன் முன் கண்டி அம்பிட்டி வாழைமலையைச் சேர்ந்த பொன்னம்பலம் சுப்பையா (42 வயது) சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

எமது வீட்டில் இருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. எனக்கு சுமார் 55,000 ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டது'' என்றார். [உ]

''சைவசமய உண்மைகளை

# உலகறியச் செய்வது இளைஞர் கடமை''

(சங்கானை)

விஞ்ஞானம் எங்கே எப்போது செயல் இழைக்கின்றதோ அங்கே சமயம் ஆரம்பமாகின்றது. விஞ்ஞான அழிவிலிருந்து மக்களைக் காப்பாற்ற சமயம் பெரிதும் உதவுகிறது

இவ்வாறு திரு. மாசிலாமணி சங்கானை முருகமூர்த்தி கோவில் மூன்றும் நாள் உற்சவத்தின்போது உரையாற்றுகையில் கூறினார்.

''சமயவாழ்வு'' என்னும் பொருள் பற்றி தொடர்ந்து பேசிய அவர் மேலும் கூறியதாவது:

மனிதனுக்கு நற்பயனை வழங்கி வந்த விஞ்ஞானம் தற்பொழுது வல்லரசுகளின் எடுபிடியினால் மனிதகுலத்தின் அழிவுக்கே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சமயமோ இதற்கு மாறாக மனிதனை உய்விக்க பிறப்பின் பயனை அடைய வழி வகுக்கின்றது.

சைவம் ஆதியானது. நாம் பன்னிரு திருமுறைகளை அறிய வேண்டும். இவை மனிதன் வாழவேண்டிய முறைகளை நன்கு உணர்துபவை. இறை அருளை தெளிவாக விளக்குகின்றன. நாயன்மார் வாழ்வையும் சமயக் கோட்பாடு போன்றவற்றை அறிய வைக்கின்றன.

காரைக்கால் அம்மையார் ''பிறவாமை வேண்டும் பிறந்துவிட்டால் உன் நாமத்தை மறவாதிருக்கவேண்டும்'' என இறைவனை வேண்டினார் இறைவனை அடைவதற்கு கூட்டுப்பிரார்த்தனை, பஜனை போன்றவற்றை தினமும் மனமுருகி பாடுவதும் ஓர் வழியாகும். இவை இறைவன் மனதில் பதியவைப்பது. சமய முறைகளில் இதுவும் ஒன்று. எனவேதான் நாம் சமயக் கோட்பாட்டை அனுசரித்து எமது எதிர்கால சந்ததியினர்க்கும் நடந்துகாட்டுவதால் அவர்களும் இறைபக்தியுள்ள நற்பிரஜைகளாக வாழ்வர்

[5-ம் பக்கம் பார்க்க]

## அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மக்கி கொட்டடிப்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் இம்மாதம் 13ந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறுகிறது.

22ந் திகதி அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், அம்பாள் வீதிவலம்வருதலும், தீர்த்த உற்சவமும் நடைபெறவிருக்கின்றது 23ம் திகதி இரவு அம்பாள் ஊர்சுற்றுலாவ ஊர்வலமாகவும் எடுத்துச் செல்லப்படும்.

உற்சவத்தில் தினமும் சமயச் சொற்பொழிவுகளும், பஜனை - கூட்டுப் பிராத்தனைகளும் இடம்பெறுகின்றன. (இ)

## மணிவாக்கு

கடவுளை நேசிப்பதாகக் கூறிக்கொண்டு சகோதரனை தூஷிப்பவன் பொய்யன் கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிக்கவே செய்வான்.

—இயேசுநாதர்.

மருத்துவ மாதருக்கு

## மதுரையில் பயிற்சி

[பண்டத்தரிப்பு]

காங்கேசன்துறை, கோப்பாய், வவனியா ஆகிய சுகாதார வைத்திய அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் மருத்துவ மாதர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று மருத்துவ மாதர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள மதுரை மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள காந்தி ஆச்சிரமத்தில் பயிற்சியளிக்கப்படவுள்ளது

அடுத்த ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ள இப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மருத்துவ மாதர்களின் சகலசெலவுகளையும் சுகாதார இலாகாவே பொறுப்பேற்கும் என்றுதெரிய வருகின்றது.

## நூல் வெளியீட்டுவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ். முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ் வளாகத் தமிழ்த்துறைத் துணைவிரிவுரையாளரான பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணிய சர்மா எழுதிய முதுகலைமாணிப்பட்ட ஆய்வுக்கட்டுரையாகிய "ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்" என்ற நூலை வெளியிடவிருக்கின்றது.

இந்நூலின் வெளியீட்டு விழா யாழ். வளாக இராமநாதன் மண்டபத்தில் ஜூன் மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ளது.

வளாகத் தலைவர் பேராசிரியர் க. வித்தியானந்தன் தலைமை தாங்குவார். (உ)

## சுகாதாரக் கல்விவகுப்பு

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி கல்வி வட்டார 1-ம், 4-ம் தர ஆசிரியர்களுக்கான சேவைக்கால சுகாதாரக் கல்வி வகுப்பு எதிர்வரும் 19-ம் திகதி மருத்துத்துறை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் அறிவித்துள்ளார்.

# "குற்றவாளிகள் அல்ல என்பதை நிரூபிப்போம்"

## கருணாநிதி அரசுக்கு சவால்

சென்னை, மே. 17

சர்க்காரியா கமிஷன் முன் எம்மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டாலும் நீதிமன்றத்தில் நாம் நிறுத்தப்படும்போது எமது உண்மை நிலை தெளிவாகும். சட்டத்தின் மூலம் நாம் குற்றவாளிகள் அல்லாஎன்பதை நிரூபித்தே தீருவோம்.

இவ்வாறு சர்க்காரியா கமிஷன் தீர்ப்பு குறித்து தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. கருணாநிதி தமது அறிக்கையில் மேலும் கூறியதாவது:

1972ம் ஆண்டு தற்போதைய தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரனும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு.எம். கல்யாணசுந்தரமும், தி.மு. கழக அரசுமீது சுமத்திய 56 குற்றச்சாட்டுகளில், சர்க்காரியா கமிஷன் விசாரித்த 28 குற்றச்சாட்டுகளில் 14 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. மீதி 14 குற்றச்சாட்டுகள் மட்டுமே நிரூபிக்கப்பட்டுள்ளன. அரசின் மிஸா மிரட்டல், மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகளின் பயமுறுத்தல் ஆகியவற்றுக்கு மத்தியில் எதிர்தரப்பினர் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முடியாத நிலையிலேயே இக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யும் தருணத்தில் எமது உண்மைநிலையை எடுத்து சட்டத்தின் மூலம் குற்றவாளிகள் அல்லவென்பதை நாம் நிரூபிப்போம்.

இது இவ்வாறிருக்க தேர்தல் காலங்களில் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய், அமைச்சர்கள், திருவாளர்கள் ஜெகஜீவன்ராம், சாந்திபூஷன் ஆகியோர், சென்னையில் நடைபெற்ற ஜனதாக்கட்சிக் கூட்டங்களில் "இந்திரா அரசு தம்மை எதிர்ப்பவர்கள் மீது கமிஷன் விசாரணை மூலம் பொய்க்குற்றச்சாட்டுகளை நிருபிக்க முயலும்" என்று பலமுறை கூறியுள்ளதை நாம் நினைவு கொள்ளவேண்டும்" (செ ...)

---

## மேலும் 13 பாக். பத்திரிகையாளருக்கு சிறை!

இஸ்லாமாபாத், மே. 17

பாகிஸ்தானில் மேலும் 13 பத்திரிகையாளர்களுக்கும், பத்திரிகை நிறுவன ஊழியர்களுக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜுல்பிகார் அலி பூட்டோவுக்கு ஆதரவான பத்திரிகையை அரசு மூடிவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க முயன்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் 4 மாதம் முதல் 6 மாதம் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (இ)

---

## மேலதிகாரியின் உத்தரவு தவருனல் ஏற்காதீர்

### பொலிசாருக்கு மொரார்ஜி அறிவுரை

புதுடில்லி, மே 17

மேலதிகாரிகள் உத்தரவிட்டாலும் தவருன காரியங்களில் ஈடுபடாதீர்கள் என்று இந்திய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் பொலிசாருக்கு அறிவுரை கூறியுள்ளார்.

மேலதிகாரிகளின் தவருன உத்தரவுகளை எதிர்க்கும் பல உத்தியோகத்தர்களும் பொலிஸ் படையில் இருக்கிறுர்கள் என்பதை நோக்கும்போது மகிழ்வடைகிறேன். இதேபோல்தொடர்ந்தும் பணியாற்றுவார்கள் என்றும் திரு. தேசாய் தெரிவித்தார்.

பொலிஸ் துறையைச் சேர்ந்த சகலரும் பொதுமக்களின் நம்பிக்கையையும், மரியாதையையும் பெற்று பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ)

---

## இந்திரா மீது நடவடிக்கையானல் பதில் நடவடிக்கை எடுப்போம்

### — பொதுக்காரியதரிசி

புதுடில்லி, மே 17

"நெருக்கடிகால அத்துமீறிய செயல்கள் குறித்து விசாரணை செய்துவரும் ஷா கமிஷனின் இடைக்கால அறிக்கை மீது திருமதி காந்திக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்குமானல் அதற்கு எதிர்நடவடிக்கை எடுக்க இந்திரா காங்கிரஸ்கட்சி தயாராக உள்ளது"

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு ஏ. ஆர். அந்துலே நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

மூன்ருவது தடவை இவ்வாறு தெரிவித்த திரு. அந்துலே, இம்முறையில் தமது கட்சியின் எதிர் நடவடிக்கை குறித்து விபரங்கள் எதையும் வெளியிட மறுத்துவிட்டார்.

### பம்பாயில் ஆர்ப்பாட்டம்

இதேவேளையில் நேற்று பம்பாயில் ஷா கமிஷனுக்கு எதிராகவும், ஆதரவாகவும் இரண்டு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

திருமதி காந்தியின் ஆதரவாளர்கள் கமிஷனுக்கு எதிராகவும், அரசு ஆதரவாளர்கள் கமிஷனுக்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### இந்திரா மீது நடவடிக்கை

புதுடில்லி, மே 17

ஷா கமிஷன் தீர்ப்பின் பிரகாரம் முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மீது உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனதா கட்சி எம். பிக்கள் அரசைக் கோரியுள்ளனர்.

22 ஜனதா கட்சி எம். பிக்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். (இ)

---

## 378 மீ. ஆழத்தில் ஒரு புவி-பௌதிக அவதான நிலையம்

யெரிவன், மே. 17

ஆர்மேனியாவில் 378 மீட்டர் ஆழத்தில் கணவாயொன்றினை அகழ்ந்து, அங்கு புவி-பௌதிக அவதான நிலையமொன்றினை நிர்மாணிக்கும் வேலைகள்பூர்த்தியாகியுள்ளன.

பூமி நடுக்கங்களை முன்கூட்டியே அவதானித்து தகவல்தருவதற்கு இந்த பாதாள அவதான நிலையம் பெரிதும் துணை செய்யும்.

முக்கோணவடிவில் அமைந்துள்ள கணவாயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த புவி-பௌதிக அவதான நிலையம் 9 பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவிலும் பொருத்தப்பட்டுள்ளன. பல்வேறு வகையினதான கருவிகள் பூமியின் அடிமட்டப்படைகளில் ஏற்படும் சிறு அசைவினையும் பதிவுசெய்யக்கூடியனவாக உள்ளது. (இ)

---

## இனநல்லுறவை வளர்க்கும் செயலமர்வு

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளும் ஆய்வுச்செயலமர்வு-கருத்தரங்கு ஒன்றை தொண்டமானுறு வெளிக்கள நிலையமும் கல்வியமைச்சும் 'லயன்ஸ்' கழகங்களும் இணைந்து நடாத்தவுள்ளன.

இச்செயலமர்வு மூலம் இம்மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று நாட்கள் நடைபெறும்.

தமிழ்சிங்கள முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் ஐம்பது பேர் இதில் கலந்து ஆய்வில் ஈடுபடவுள்ளனர்.

இனங்களுக்கிடையே பரஸ்பரம் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இத்தகைய செயலமர்வு நடாத்தப்படுகிறது. தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் ஏதாவது இரண்டில் அறிவுபெற்ற மாணவர்கள் இச்செயலமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அறிவியல், சமூகவியல் முதலியவை தொடர்பான பிரச்னைகளை ஆசிரியர்களினதும் விஞ்ஞான அறிஞர்களதும் வழிகாட்டலில் மாணவர் ஆராய்வர்.

வெளிக்கள நிலையத்தின் புதிய மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெறும். மாணவர் தங்கி நிற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிலையத்தலைவரும் நெறியாளருமான கே. எஸ். குகதாசன் கல்வியமைச்சைச் சேர்ந்த மு. அற்புதநாதன் ஆகியோர் ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர். [உ]

---

## இலங்கை வானெலியில் உள்ளூர்கலைஞர்புறக்கணிப்பு

### நடிகர் தனரத்தினம் கண்டனம்

[வெள்ளவத்தை]

இந்தியத் திரைப்படங்களுக்கும் அதன் பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இலங்கை வானெலி, உள்ளூர் திரைப்படங்களையும் புறக்கணிப்பது ஏன்? இந்நிலை மாறி உள்ளூர் திரைப்பட வளர்ச்சிக்கு இலங்கை வானெலி ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை தமிழ்பட நாயகனும், தற்போது திரையிடப்படவிருக்கும் "தெய்வம் தந்தவீடு" திரைப்படத்தில் நடித்திருப்பவரும், 'நான் உங்கள் தோழன்' திரைப்படத்தில் பாதர் ஜோசப்பாக நடித்து பலரின் உள்ளத்தில் இடம் பெற்றவருமான நடிகர் எஸ். என். தனரத்தினம் நமது நிருபரிடம் தெரிவித்தார்

மேலும் நடிகர் தனரத்தினம் கருத்து தெரிவிக்கையில்:

இலங்கையில் இருபத்தொரு திரைப்படங்கள் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த திரைப்படங்களில் பல இனிமையான பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றின் இசைத்தட்டுகள் கூட தயாரிப்பாளர்களின் செலவில் இலங்கை வானெலியில் ஒலிபரப்பப்படுவதில்லை. ஏதோ கண்துடைப்புக்காக வாரத்தில் சில நாட்கள் ஒரு பாடல் வீதம் ஒலிபரப்பிவிட்டு சமாளிக்கிறுர்கள்

இந்தியப் பாடல்களுக்கோ, பணம் கொடுத்தும் பாடல்களை ஒலிபரப்ப தயாராகிறுர்கள், கேட்டால் இந்திய பாடல்களைத்தான் நேயர்கள் விரும்புகிறுர்கள் என்கிறுர்கள் நேயர்களிடம் கேட்டால் தற்பொழுது இலங்கை வானெலியில் கடமையாற்றும் நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள், கட்டுப்பாட்டாளர்களை நீக்கிவிட்டு இந்தியாவிலிருந்து கொண்டுவந்தால் சிறப்பாக இலங்கை வானெலியில் செயல்படுவார்கள் என்று சொல்கிறுர்கள் இதை இவர்கள் செயல் படுத்துவார்களா?

சுமார் பத்துவருடங்களுக்கு முன்பு சிங்கள சேவையில் அரைமணி நேரம் மட்டுமே சிங்கள பாடல்களும் மிகுதி நேரம் ஹிந்திபாடல்களும் ஒலிபரப்பப்பட்டு வந்தன. மொழிப்பற்றும் தேசாபிமான உணர்வுமுள்ள அதிகாரிகள் இந்நிலையை படிப்படியாக மாற்றி சிங்கள பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததனால் சிங்கள கவிஞர்கள், சிங்கள பாடகர்கள் இசையமைப்பாளர்கள் எண்ணற்றவர்கள் உருவாகி இன்று சிங்கள இசை சர்வதேச ரீதியில் வளர்ச்சியடைந்துள்ளது.

தமிழ்மொழிப்பற்றும், தாய் நாட்டுணர்வும் இருக்குமானல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனிமேலாவது உள்ளூர் பாடல்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலையகம் போன்ற பகுதிகளில் எத்தனை எத்தனையோ கலைஞர்களில் வானெலி நடிகர்களாக பாடகர்களாக சுடர்விட்டு பிரகாசிக்க கூடிய திறமைசாலிகள் இருக்கிறுர்கள். ஆனல் இவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

ஒருவருக்கு வழங்கப்பட்டால் கூட போக்குவரத்து செலவு வழங்குவதில்லை. வெளிநாட்டு கலைப் படைப்புகளுக்கு பணம் கொடுத்து வாங்கமுடியுமானல் ஏன் நமது கலைஞர்களுக்கு போக்குவரத்து செலவை வழங்கக்கூடாது [இ]

---

## "கலைஞரிடையே ஒற்றுமை வேண்டும்"

[வெள்ளவத்தை]

"இலங்கைத் தமிழ்த் திரைப்படத்தயாரிப்பு சம்பந்தமாக எதிர்காலத்தில் பல இடையூறுகள் ஏற்படலாம் தமிழ்த் திரைப்படங்களை உருவாக்கும் தயாரிப்பாளர்களும் தொழில் நுட்ப கலைஞர்களும் ஐக்கியப்பட்டு தங்கள் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள், தொழில்நுட்ப கலைஞர்களின் கூட்டத்தில் தயாரிப்பாளர் திரு. வி. பி. கணேசன் தலைமை தாங்கி உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

"சுதர்ஸி" மண்டபத்தில் நடைபெற்ற திரைப்பட கலைஞர்களின் ஆலோசனைக் கூட்டத்திற்கு தமிழ்ப்படத்தயாரிப்பாளர்களும், தொழில்நுட்ப கலைஞர்களும் கலந்துகொண்டார்கள்.

மேலும் திரு. வி. பி. கணேசன் பேசுகையில் இதுகாலவரை தமிழ்த்திரைப்பட வளர்ச்சியைக் கருதி திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தை திரைப்பட உருவாக்குபவர்கள் சங்கமாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. தயாரிப்பாளர்களுடன் தொழில்நுட்ப கலைஞர்களையும் ஒன்றிணைக்க வேண்டும் என்று தெரியவருகிறது" என்ருர்.

"காத்திருப்பேன் உனக்காக" தயாரிப்பாளர் திரு. ஜெயராமச்சந்திரன் பேசும் பொழுது,

இலங்கையில் தயாரிக்கப்படும் சிறந்த படங்களுக்கு அரசு பரிசு வழங்க வேண்டும். இலங்கை வானெலி தயாரிப்பில் இருக்கும்போதே இலங்கைப்படப் பாடல்களை ஒலிபரப்ப வேண்டும்.

இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்புகளை உருவாக்கும் பொழுது இலங்கை கலைஞர்களுக்கு சரிசமபங்கு வழங்க வேண்டும். இங்குள்ள தொழில் நுட்ப கலைஞர்களை பயன்படுத்த வேண்டும்" என்ருர்

மற்றும். திரு. சுண்டிக்குளி சோமசேகரன், டைரக்டர் எஸ். வி. சந்திரன், திரு. லீனிடி. கொஸ்தா ரகுநாதன் ஆகியோரும் பேசினர். [உ]

---

## லண்டனில் பொன்னடை

லண்டன், மே 16

மூத்த தமிழ் அறிஞரும் தமிழ் ஆங்கில கட்டுரை ஆசிரியரும், நூலாசிரியருமான திரு. வை முத்துக்குமாரசாமி தமிழுக்கும் எழுத்துத்துறைக்கும் ஆற்றிவரும் பணியைப் பாராட்டும் வைபவம் ஒன்று இம்மாதம் 20ம் திகதி மாலை லண்டன் விம்பிள்டன் கொனத்யுளக் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறுகிறது.

திரு. குமாரசாமியின் பிறந்த தினமான அன்று அவர் 'பொன்னடை' போர்த்திக் கௌரவிக்கப்படுவதுடன் அவருக்கு 'பொற்கிழி'யும் வழங்கப்படும்.

திரு. கி. ஞானசூரியன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ)

---

## இந்தோனேஷிய ஜனத்தொகை

ஜகார்த்தா, மே. 17

இந்தோனேஷியாவின் இன்றைய ஜனத்தொகை 1,416 லட்சம் பேர் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்தோனேஷியாவின் ஜனத்தொகை 155 லட்சத்தால் அதிகரித்துள்ளது. (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
பெண் தெய்வம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
பாலச்சந்திரன்-சந்திரகலா
நடித்த
வாடைக்காற்று

## வாசகாவட்டத்தின் சார்பில் சிறப்புரை

(திருகோணமலை)

திருகோணமலை பொது நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் சட்டத்தரணி திரு. ஒ. எல். எம். இஸ்மயில்ஸ், "எனது இந்தியச் சுற்றுப் பயண நினைவுகள்" என்னும் பொருள்பற்றி இன்று [வியாழன்] மாலை 6-00 மணிக்கு நகர மண்டபத்தில் சிறப்புரை ஆற்றுவர். அதனைத் தொடர்ந்து ஓர் படக்காட்சியும் இடம் பெறும்.

வெற்றிகரமான 3-வது மாதம்
மனோகரா
(சாவகச்சேரி) தினசரி 4 காட்சிகள்
எம்! ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சோதி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692
ஜெமினி-வாணிஸ்ரீ
(யாழ். நகர்)
தபால்காரன் தங்கை

ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) சிவாஜி—மஞ்சுளா
நடித்த
உ த் த ம ன்
(ஈஸ்ட்மன் கலர்)

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only
Pauldenemam, Clint Martin in
Scotland Yard Accepts
The Challenge
(Detective & Action)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7644.
தினசரி 10-30, 2-30, 6-30, 9 45
சிவகுமார், முத்துராமன், ஜெயசித்ரா, சோ.
எங்கம்மா சபதம்
மே 20ம், 22ம் திகதிகளில்
காலை 8-30 மணிக்காட்சிமட்டும் CIRCUS
—color—

வின்ஸர் ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா,
(சாவகச்சேரி) விஜயகுமார், நிர்மலா, ஸ்ரீ அசோகன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஜானகி சபதம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெயலலிதா
(இருவேடம்)
நடித்த
வந்தாளே மகராசி
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) வெற்றிகரமான
தினசரி 4 காட்சிகள் 2வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
காலங்களில் அவள் வசந்தம்
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்
(கலர்)
Also Showing World news,
Soccer—Germany vs. Italy — World Cup Tournament — Motor Cycle Display. (All in Colour)

# மனைவியைக் கொன்றதாக வழக்கு: விசாரணை நடுவில் கணவன் விடுதலை!

## 14 வயது மகனும் சாட்சியமளித்தார்

[யாழ்ப்பாணம்]

மனைவியைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரியான கணவன் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் காரைநகரில் 76 டிசம்பர் 30-ம் திகதி இராசரத்தினம் அவரது மனைவி சவுந்தரத்தை கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி கே. பீ. என். வரதராசா, சட்டத்தரணி என். சுரேந்திரன், சட்டத்தரணி செல்வி வின்சென்ட் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். அரச தரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் வழக்கை நடத்தினர்.

காரைநகரைச் சேர்ந்த தம்பித்துரை ஐயம்பிள்ளை கூறியதாவது: "சம்பவம்நடந்ததினம் சவுந்தரம் என் வீட்டிற்கு வந்தார். கணவனுடன் அவர் சுதவளிப்படும் நாட்களில் என் வீட்டிற்கு வருவதுண்டு அன்றும் கணவனுடன் சுதவளிப்பட்டுக் கொண்டு வந்தார். நான் சவுந்தரத்தைக் கண்டித்து விட்டேன் போகும்படி. நான் சவுந்தரம். வந்தபின் எதிரி வீட்டை போகவில்லை. எதிரியைக் காணவுமில்லை. பின் பொலிசார் என் படலையடியால் சென்றனர். நான் அவர்கள் பின்னால் போய்ப் பார்த்தேன். சவுந்தரம் 4 வருடத்திற்கு முன் எதிரியை மணந்தார். அவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள். சுதவளிப்படுவதுண்டு. சவுந்தரத்திற்கு நெற்றியில் ஒரு காயம் இருந்தது. அதில் பஞ்சு ஒட்டப்பட்டிருந்தது".

சட்டத்தரணி வி. என். நவரத்தினம் குறுக்கு விசாரணை செய்தபோது சவுந்தரம் ஏற்கனவே ஒருவரைத் திருமணம் செய்திருந்தாரென்றும் பின் அவரைக் கைவிட்டு எதிரியுடன் வாழ்ந்தார் என்றும் திரு. ஐயம்பிள்ளை கூறினர்.

சட்: சவுந்தரத்தின் முதல் கணவர் எங்கே? - இறந்துவிட்டார்.

சட்: எதிரியின் வீடு தெரியும்? - ஆம்.

சட்: ஐனநெருக்கடியின் இடத்தில் வீடு உண்டு? - ஆம்.

சட்: எதிரி உமது அண்ணன்? - ஆம்.

காரைநகரைச் சேர்ந்த கந்தையா இராசம்மா சாட்சியமளிக்கையில் சம்பவம் நடந்த தினம் சவுந்தரம் தன் வீட்டிற்கு வந்ததாகவும் கோபித்துக்கொண்டு வந்துவிட்டேன் என்று சொன்னதாகவும் கூறினர்.

இராசம்மா மேலும் கூறியதாவது: சவுந்தரத்தின் நெற்றியில் பஞ்சு ஒட்டப்பட்டிருந்தது. என்ன செய்தது என்று கேட்டேன். அம்மியில் விழுந்ததால் காயம் ஏற்பட்டதாக கூறினர். காயத்திற்கு கோப்பித்தூள் அப்பியதாகவும் சொன்னர்.

"இரவு வீட்டில் தங்கினர். அடுத்தநாள் காலை, என்னிடம் 50 சதத்திற்குக் கடலை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப்போவதாகச் சொல்லிவிட்டுப்போனர். அதற்கு பின் சவுந்தரத்தைக் காணவில்லை. சவுந்தரம் மூன்முவது கலியாணம் செய்திருந்தார்.

சுப்பையா அன்னப்பிள்ளை (65 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "சவுந்தரத்தைத் தெரியும், சவுந்தரம் இறந்து கிடந்த இடம் கறுவம் பற்றை. நான் போய்ப்பார்க்கவில்லை. அந்த இடத்திற்குசவுந்தரம் முன்னர் ஒரு தடவையும் வரவில்லை. அக்காணியில் மரங்கள் நெருக்கமாக உண்டு".

எதிரியின் மகனுன இராசரத்தினம் செல்வரத்தினம் (வயது 14) சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "எதிரி என் தகப்பனர். இறந்தவர் எனது சிறியதாயார். நான் எதிரியின் முதல்தாரமகன். சின்னம்மாவுக்கும், அப்பாவுக்கும் பிரச்னை ஏற்படுவதுண்டு. சம்பவம் நடந்ததினம் தெரியும். அன்று சண்டை பிடித்தனர். சின்னம்மாவின் தலையில் காயம் ஏற்பட்டது. அக்காயம் தடியால் ஏற்பட்டது. அப்பா தடியால் அடித்தார். சின்னம்மா வெளிறல் ஓடிவிட்டார். எங்குபோனரென்று தெரியாது. அடுத்த நாள் காலை இன்னம்மா வந்தார்.

"அப்பா அதிகாலை 5 மணிக்கு கடல் தொழிலுக்குச் சென்றுவிட்டார். நான் கடலுக்குப் போவதில்லை. என் தம்பி செல்வராசா தான் அப்பாவுடன் கடலுக்குப்போவதுண்டு. இன்னம்மா வரும்போது கச்சானும் சோளமும் கொண்டுவந்து தந்தார்.

"இன்னம்மா மரக்குற்றி ஒன்று எடுத்து திலத்தைத் தோண்டி ஒரு போத்தல் எடுத்தார். அதில் நல்லெண்ணை நிறத்தில் ஏதோ இருந்தது. பின் சீனியும் எடுத்தார். முன்னுல் உள்ள சீதாலட்சுமி வீட்டிற்கு போனர். பின் திரும்பி வந்து "நான் வரமாட்டேன்" என்று சொல்லிவிட்டுப் போனர். இன்னம்மாவின் மகளான என் தங்கச்சியை கூப்பிடும்படி சொன்னேன். தங்கச்சி இன்னம்மாவை வரும்படி கூப்பிட்டார். அவர் வராமல் போய்விட்டார்.

"இன்னம்மா வயிரவர் கோவில் பக்கம் போனர். நானும் தங்கச்சியும் வீட்டிலிருந்தோம்.

"அப்பாவும் தம்பியும் நண்பகல் 11 மணிக்கு வீட்டுக்குவந்தனர். அப்பா எங்களுக்குப் பழஞ்சோறு குழைத்துத் தந்தார். நாங்கள் சாப்பிட்டோம். இன்னம்மா வந்தது பற்றி அப்பாவுக்குச் சொன்னேம். "போனவள் வருவாள் தானே" என்று அப்பா சொன்னர். அப்பா தேடப்போகவில்லை. இருண்டபின் இன்னம்மா இறந்து கிடப்பதாக அறிந்தோம். அப்பாவுக்கும் அந்த நேரம் தெரிந்தது. இன்னம்மாவை அப்பாவுடன் போய்ப் பார்த்திருக்கவேணும். எனக்கு ஞாபகமில்லை".

காரைநகரைச் சேர்ந்த நாகம்மா சவுந்தரம்மா கூறியதாவது: "சவுந்தரத்தை தெரியும். சம்பவம் நடந்த தினம் ஞாபகம் இருக்கிறது. சவுந்தரம் இறந்த பக்கத்திலிருந்து சத்தம் கேட்டது. சவுந்தரம் "ஐயோ அடியாதே" என்று ஒருதரம் கூறினர். வேறு சத்தம் கேட்கவில்லை. அது சவுந்தரத்தின் குரல். நான் போய்ப் பார்க்கவில்லை. அப்போது பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுத்துக்கொண்டிருந்தேன். பின் வேலி கட்ட நானும்சின்ன மகனும் போனேம். கயிறு, குத்தூசி கொண்டு போனேம். நாய் குரைத்துக் கொண்டு ஓடிவந்தது. தம்பி தூரதில் இந்த இயமன் நாய் தான் போற இடமெல்லாம் வருகிறது என்றுகூறி கல் எடுத்து எறிந்தேன் அப்போது அவ்விடத்தில் எதிரி வந்தார். ஏதோ சொல்லிக்கொண்டு போனர். அதன்பிறகு சவுந்தரம் இறந்துவிட்டதாக அறிந்தேன் நான் போய்ப் பார்க்கவில்லை.

சட்டத்தரணி வி. என் நவரத்தினம் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்; எதிரிக்கும் உமக்கும் ரோபம் இருக்கிறதா? இல்லை

[6-ம் பக்கம் பார்க்க]

## உலகறிய—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

ஆன்மா லயிக்கின்ற இடமான ஆலயங்களில் வேளிக்கைகள், பொப்இசை போன்ற விரும்பத்தகாதவற்றை புகுத்தி இளைஞர் சமுதாயத்தின் மனதை மாற்றி அவர்களை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லும் செயல்கள் நிறுத்தப்படவேண்டும். இதற்கு அவ்வப்பகுதிகளில் உள்ள இந்துமன்றங்கள் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் ஒத்தாசை புரிய முன்வரவேண்டும் அப்போதுதான் சமய வாழ்வு மலர ஏதுவாகும்.

மனிதன் நல்லவனுக - பிறருக்குத் தீங்கு செய்யாமல்- இயன்ற இயன்ற உதவி புரிபவனுக இருந்தால் அதுவே போதும்; இறையுணர்வும் வழிபாடும் தேவையில்லை. என்பர். மனிதநல கோட்பாட்டினை மட்டும் நம்புபவர்கள் மனித நலக் கோட்பாடு என்பது நல்ல கொள்கையே எனினும் அது மேலும் இறைப் பற்றுப் பயன் விளைவித்தலும் வாழ்க்கை நிறைவுத் தன்மை பெற்றுச் சிறப்புறுவதற்கும் சமய உணர்வும் அதனுடன் இணைவது இன்றியமையாதது. ஆனல் சமயத்தின் பெயரால் இடம்பெறும் காலத்திற்கொவ்வாத கண்மூடித்தனமான வரட்டு வேதாந்தங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் மூடக் கொள்கைகளையும் அடியோடு களையெடுத்து புனிதப்படுத்தவும் நமது சமயத்தின் உயர்ந்த இந்த தத்துவங்களை நாம் எல்லோரும் பின்பற்றி ஒழுகவும் அவற்றினை உலகறியச்செய்யவும் இளைஞர்கள் முன்வரவேண்டும். ஆய்வு நோக்கின்றி எடுத்த எடுப்பில் நாஸ்திகம் பேசுவது அவ்வளவு பொருத்தமானதல்ல, விரும்பத்தக்கதுமல்ல. (உ)

Rio (Jaffna)
Now Showing
Seven Samurai
From 20 5-78
LABYRINTH of LOVE
(Adults Only)

## நீதிபதி கூறிய புத்திமதி

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் இனிமேல் கையெடுத்து அடிப்பதை விட்டுவிடுமாறு காரைநகர் கொலை வழக்கில் விடுதலையான இராசரத்தினத்திற்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜனப் எம். எம். அப்துல்காதர் புத்திமதி கூறினர்.

நீதிபதி ஜனப் எம். எம். அப்துல்காதர் தீர்ப்பளிக்கையில் மேலும் கூறியதாவது:-

"நீர் 1955ம் ஆண்டு தை மோசக்கொலை வழக்கில் 7 வருடம் 4 மாதம் சிறைத்தண்டனை பெற்றிருக்கிறீர். அதன் பின்பாவது அடிப்பதை விட்டிருக்க வேண்டும் கடந்த காலத்தை பார்த்தால் எந்த நீதிபதியும் கருணைகாட்ட மாட்டார்கள். ஆகக்கூடிய தண்டனை வழங்க அதிகாரம் உண்டு.

"நீர் பெண்களையும் பிள்ளைகளையும் கையெடுத்து அடிக்கும் பழக்கத்தை இன்றுடன் விட்டுவிடவேண்டும்.

"இவ் வழக்கில் சாட்சியம் இருந்திருக்குமானல் நீர்குற்றவாளியாகக் காணப்பட்டுகுறிப்பிட்ட குற்றத்திற்கு உமக்கு தூக்குத்தண்டனை கிடைத்திருக்கும். சாட்சியம் இல்லாததினுல் ஒன்றும் நடக்கவில்லை. யார் செய்ததென்று தெரியாது. இனிமேலாவது அடிக்கும் பழக்கத்தை கைவிடவேண்டும். உம்மை விடுதலை செய்கிறேன்".

# பருத்தித்துறை டிப்போவில் டயர்கள் திருட்டு

[நெல்லியடி]

இ. போ. ச பருத்தித்துறை டிப்போவில் திருட்டுப் போன மூன்று ரேடியேற்றர் சம்பந்தமான விசாரணை செய்து வரும் பொலிசார், டிப்போவில் பல டயர்கள் திருடப்பட்டதையும் கண்டுபிடித்துள்ளார்கள்.

ரேடியேற்றர் சம்பந்தமான விசாரணையை மேற்கொண்ட பொலிசார் திருட்டுப்போன றிம் வகைகள், ஒயில் மீற்றர்கள் என்பனவற்றையும் கண்டுபிடித்தது குறிப்பிடத்தக்கது.

சார்ஜண்ட் செ. மாணிக்கராசா தலைமையில் பொலிசார் தொடர்ந்தும் விசாரணை செய்துவருகின்றனர். [உ]

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

வடதுன்னை அல்லைப்பதி ஸ்ரீசுப்பிரமணிய கோவில் வருடாந்த உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 6ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவம், மணவாளக்கோல உற்சவம் ஆகியன நடைபெறும்.

வல்லிபுரக்கோவில் பிரதம குரு அ. இராமச்சந்திரக்குருக்கள் உற்சவத்தை நடத்தி வைப்பார். [இ]

## தொண்டமனாறு உவர்நீர் ஏரியில்...

[பருத்தித்துறை]

தொண்டமானாறு உவர் நீரேரியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஆராய்ச்சிக்கு யாழ். வளாக விலங்கியற் பீடத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையிலான குழுவை அழைப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கடல் நீரேரியில், அந்நியச் செலவாணியை ஈட்டித்தரக்கூடிய பல மீன் குஞ்சுகள், கூடுகட்டி வளர்க்கப்படுவதுடன் வேறு இன மீன்களும் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மனைவியைக்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்: எதிரியுடன் கோபிக்க வேண்டிய காரணம் இல்லை. இல்லை.

சட்: உங்கள் வீட்டிலிருந்து சவுந்தரம் கிடந்த இடத்தை பார்க்கலாம்? இல்லை.

சட்: அங்கு நீதவான் பொலிஸ் விசாரணைக்கு வந்தது தெரியுமா? ஆம்.

சட்: ஏன்போய் சொல்லவில்லை? நான் அந்தநேரம் வீட்டில் இல்லை

சட்: ஊரைவிட்டுப் போனீரா? இல்லை வீட்டில் இருக்கவில்லை

சட்: உமது வீட்டு முற்றத்தில் நின்று பார்த்தால் விசாரணை நடந்த இடம் தெரியும்? தெரியாது

சட்: பின் எப்பொழுதாவது சொன்னீரா? 5 நாட்களுக்குப் பின் சொன்னேன்.

சட்: அதுவரைக்கும் ஒருவருக்கும் சொல்லவில்லை? இல்லை

சட்: இது ஒரு முக்கியமான விடயம்? ஆம்.

சட்: விதானையாரிடம் சொன்னீரா? நான் அதுபற்றி யோசிக்கவில்லை.

சட்: சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிரியை றிமாண்டில் வைக்க பார்த்தார்? இல்லை.

சட்: உமது அண்ணனுக்கும் எதிரிக்குமிடையில் ஒரு வழக்கு நடக்கிறது? ஆம்

சட்: அந்த வழக்கில் நீர் ஒரு சாட்சி? ஆம்.

நீதிபதி: அந்த வழக்குமுடியவில்லை? இல்லை

இக்கட்டத்தில் ஜூரிசபையினர் விசாரணையை தொடர்ந்து நடத்துவதில் பிரயோசனமில்லையென ஏகமனதாக கூறியதைத் தொடர்ந்து. நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார். (ச)

## தொகுதி அபிவிருத்தி பற்றி ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை பொதுச்சபைக் கூட்டம் திருநெல்வேலியில் உள்ள இளைக்காரியாலயத்தில் நல்லூர் எம். பி திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றபோது தொகுதி அபிவிருத்தி பற்றி ஆலோசிக்கப்பட்டது.

அரசினால் தொகுதிக்கு வழங்கப்படும 10 லட்சம் ரூபாவையும் குளங்கள், வாய்க்கால்களை வீதிகளைத் திருத்துதல் பாடசாலை ஆஸ்பத்திரி ஆகியவற்றை அபிவிருத்தி செய்வது ஆகிய பணிகளுக்கு செலவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தொகுதியிலுள்ள 14 கிளைகளிலிருந்து பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். [இ]

## 1,15,000 பேர் கருத்தடை சிகிச்சை

புதுடில்லி, மே 17

குஜராத் மாநிலத்தில் கடந்த ஆண்டு 1 லட்சத்து 15 ஆயிரம் பேர் கருத்தடை சிகிச்சை பெற்றுக்கொண்டனர் என்று மாநில சுகாதார அமைச்சர் திருமதி ஹேமா தெரிவித்தார். (இ)

## அட்டனில் கைதான—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேரவைக்குழு கொழும்பில் கூடி ஆராயவிருக்கின்றது. பெரும்பாலும் இச்சட்ட மூலத்தைக் கடுமையாக எதிர்ப்பதற்கு கூட்டணிக் குழு முடிவுசெய்யக்கூடும் என்று கருதப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும இச் சட்டமூலத்தை வன்மையாக எதிர்க்கக்கூடும் என்று தெரிகிறது. (ம)

## வங்கிக்கிளை

(பருத்தித்துறை)

இலங்கை தேசிய சேமிப்பு வங்கி தனது கிளை ஒன்றை பருத்தித்துறையில் ஜூலை மாத நடுப்பகுதியில் திறக்கவிருக்கின்றது.

## தாக்குதலுக்குள்ளானவரை நீதவான் காப்பாற்றினர்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் இருந்த ஒருவரை இனந்தெரியாத வாலிபர் ஒருவர் கம்பியால் தாக்கிவிட்டு மாயமாய் மறைந்தாகக் கூறப்படும் சம்பவத்தை நேரில் அவதானித்த யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு கே. வி. நவரெட்டினம் காயமடைந்தவரை காப்பாற்றி பொலிசாரின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்.

இச்சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் முட்டாசுக் கடைச்சந்தியில் நடைபெற்றது. சொந்த அலுவலாக அவ்வழியால் வந்த நீதிபதி திரு. நவரெத்தினம் இச்சம்பவத்தை நேரில்கண்டார். தாக்கப்பட்டவரை யாரும் காப்பாற்ற முன்வராமல் இருந்ததை அவதானித்து நீர்வாய்க்காலுக்குள் கிடந்தவரை உடன் தூக்கி படுக்கவைத்து யாழ். பொலிசாரிடம் தொடர்புகொண்டு தாக்கப்பட்டவரை மருத்துவமனையில் அனுமதிக்க உத்தரவிட்டார்.

தாக்கிய மர்மவாலிபரை யாழ். பொலிசார் தேடி வருகின்றனர். [கே]

## 4 கோடி மக்களுக்கு மனநோய்

ஜெனிவா, மே 17

உலகில் 4 கோடி மக்கள் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

8 கோடி மக்கள் போதைவஸ்து ஆகியவற்றை அருந்தி நரம்புத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இந்நிறுவனம் அறிவித்துள்ளது. [இ]

## 'இயக்கத்தில் சேர முன்வாருங்கள்'

[வவனியா]

"தேர்தல் காலத்தில் எமது தொகுதியிலுள்ள சிங்களமக்களும் எமது கோரிக்கைகளை ஏற்று எமக்கு ஆதரவளித்தார்கள். நாம் தமிழ் ஈழம் கண்டபின்பும் இங்குள்ள சிங்கள மக்கள் சுதந்திர புருஷர்களாக வாழ்வார்கள் என்பது உறுதி"

இவ்வாறு வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் நேளுக்குளம் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையைத் திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சு. வீரசிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில், "மலையகத்தமிழர்களின் பிரச்னைகளை நாம் நன்கறிவோம். அவர்களுக்கு உதவிகளைச் செய்யச் சித்தமாகவுள்ளேன். தேர்தல் காலத்தில் எம்மை எதிர்த்தவர்கள் யாராக இருந்தாலும் தூய்மையாக எமது இயக்கத்தில் அவர்கள் சேர்ந்து எம்முடன் ஒத்துழைக்க முன்வரவேண்டும். எம்மீது வைத்த நம்பிக்கை என்றும் வீண்போகாது" என்று கூறினர்.

## மோசடிக்குற்றச்சாட்டு: எதிரிகள் விடுதலை

(மாவிட்டபுரம்)

தபால் நிலைய அடையாள அட்டையில் மோசடி செய்ய முயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட தபால் ஊழியர் ஒருவரும், மற்றுமொருவரும் போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் விடுதலைசெய்யப்பட்டனர்

அளவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை சிவசேகரம், அளவெட்டி தபால்நிலைய ஊழியர் கந்தையா தியாகராசா ஆகியோர்மீது பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காக தபால் நிலையங்களினூல் வழங்கப்பட்ட அடையாள அடைகளில் ஒருவருக்காக வேறொருவர் பரீட்சையில் தோற்றக் கூடியதாக மோசடிசெய்ய எத்தணித்ததாகவும், அம்மோசடிக்கான தேவையான உபகரணங்களை வைத்திருந்ததாகவும் யாழ் விசேட குற்றத் தடுப்புப் பொலிசாரால் இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டபோது எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், மு திருநாவுக்கரசு ஆகியோர் எதிரிகள் நிரபராதிகள் என வாதாடினர்.

போதுமான சாட்சியங்கள் இல்லாமையால் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

யாழ் விசேட குற்றத்தடுப்பிரிவு சாஜன்ட் ஆட்சபையப் வழக்கை நடத்தினர். [உ]

## டொமினிக்...

[1-பக்கம் தொடர்ச்சி]

கீழும் ஐஞ்சியதியும் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன

## இன்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பினூலும் அத்தகைய அமைப்புடன் சம்பந்தப்பட்ட வேறு ஆட்களினாலும் புரியப்படும் சட்டவிரோதச் செயற்பாடுகளைச் செவ்வையாகத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்வினவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்கும் ஆன ஒரு சட்டமூலம்.)

## துப்பாக்கி முனையில் ரூ 40000 நகை கொள்ளை

[கொழும்பு]

பம்பலப்பிட்டியில் உள்ள வீடொன்றில் இருந்து பட்டப் பகல்வேளை 40,000 ரூபா பெறுமதிமிக்க தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பெல்பொட்டம் அணிந்த மூன்று இளைஞர்கள் வீட்டினுள் நுழைந்து கைத்துப்பாக்கி முனையில் வீட்டு வேலைக்காரியை மிரட்டி இந்நகைகளை அபகரித்தனராம்.

## ஆடு திருடி அதன் தலையை விட்டுச் சென்ற திருடர்

(நெல்லியடி)

கரவட்டியில் உள்ள வீடொன்றுக்குச் சென்ற திருடர்கள் அங்கிருந்த ஆட்டைத் திருடி அதன் தலையை வெட்டிப்போட்டுவிட்டு கிணற்று வாசலில் இரத்தத்தையும் தலையில்லாத ஆட்டையும் தூக்கிச்சென்று விட்டனராம்.

இது இவ்வாறு இருக்க கரவெட்டி அத்துளுபகுதியில் பெண்மணி ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடன் அறுத்துக் கொண்டு ஓடி விட்டானாம். (உ)

## செல்வா உருவப்படம்

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் செல்வாவின் உருவப்படம் நன்று முன்னர் நெல்மணிகளால் அமைக்கப்பட்டது போன்று தங்கத்தினால் உருவாக்கப்படவுள்ளது.

15 பவுணில் அமைக்கப்பட இருக்கும் இவ்வுருவப்படத்தை நெல்மணி ஓவியர் திரு. துரைசிங்கம் துரைரத்தினம், திருவாளர்கள் எஸ். பாலசுப்பிரமணியம் ரி. துரைவீரசிங்கம், எஸ். சுப்பிரமணியம் ஆகியோரால் உருவாக்கப்படவுள்ளது

தங்கத்தை நெல் மணிகள் போன்று சிறிதாக அமைத்து உருவாக்கப்படும் இந்த உருவப்படம் யாழ். நகரில் அமைக்கப்படவுள்ள தந்தை செல்வாவின் தூபியில் வைக்கப்படும் என்று திரு. துரைரத்தினம் கூறினர். [இ]

## 'கி. அ. சங்கத்தின் பொறுப்புகள் கூடும்'

(மாவிட்டபுரம்)

"இவ்வருட ஆரம்பம் தொடக்கம் கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற முறையில் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் புனரமைக்கப்படவேண்டும் என்ற அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க தற்போது புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. வருங்காலத்தில் கிராமஅபிவிருத்திச் சங்கங்களுக்குப் பல பொறுப்புக்களும் சந்தர்ப்பங்களும் அளிக்கப்பட இருக்கின்றன. ஒவ்வொரு சங்கமும் வேலைத் திட்டம் தயாரித்து அதன்படி வேலைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்"

மாவிட்டபுரம் பழை கூத்தியவத்தை கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புப் பொதுக்கூட்டத்திற் கலந்துகொண்டு உரையாற்றிய வலிகாமம் வடக்குக் கிராமஅபிவிருத்தி அலுவலர் க. சிவரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கத்தின் புதிய எல்லைகளும் பெயரும் சபையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன. பழைய விமன்காமம் கிராமசேவையாளர் விமன்காமக் கிராமத்தின் பெரும் பகுதியைக் கொண்டிருக்கும் அபிவிருத்திச்சங்கம் விமன்காமம் அபிவிருத்திச்சங்கம் என அழைக்கப்படுவதால் விமன்காமம் கிராமத்தின் ஒரு பகுதியையும் பழைக் கிராமம் முழுவதையும் கொண்டுள்ள இச் சங்கம் பழை கூத்தியவத்தைக் கிராமஅபிருத்திச் சங்கம் என அழைக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

பழைய விமன்காமம் கிராமசேவகர்பகுதிப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் யேசுபாலனும் கூட்டத்தில் உரைநிகழ்த்தினர்.

எதிர்வரும் இரண்டாண்டு காலத்திற்குப் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு மு வயிரவப்பிள்ளை, உபதலைவர்: சு. கணேசலிங்கம், செயலாளர்: வை. சந்திரபாலன், உபசெயலாளர்: அ. அருள்நேசன், பொருளாளர்: ஆ. விஜிகுமார். நிர்வாகசபை உறுப்பினர்களாக அறுவர் தெரிவாகினர். [உ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 18-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram : "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in SriLanka.